முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 786**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.11.2021, செவ்வாய்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கராசா
ஓங்காரக்குடில் படைத்த ஞானதேசிகா
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி

2. ஆசிதனை பிலவ தேள்திங்களில்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 07ம் நாள், 23.11.2021 செவ்வாய்கிழமை)
அரங்கன் நீ கேட்க அருளுவேன்
வாசிவென்ற ஞானியர் படைகள்
வலம்வந்து அரங்கனை காத்துவர
**(வாசி வென்ற ஞானியர்கள் கூட்டம் ஓங்காரக்குடிலாசானை பாதுகாத்து ஓங்காரக்குடிலாசான் உலக பணிகளை மேற்கொள்ள உடனிருந்து காத்து வருகிறார்கள்)**

3. வருகின்ற அரங்கன் முழுமதி பூஜையெல்லாம்
வையகத்தில் மேலவர்கள் ஆசியால் நடந்தேறும்
தருகின்ற அரங்கன் தர்மமெல்லாம்
தவசியர்கள் தரும் அருளமுதாகும்

4. ஆகவே அரங்கன் தொடர்பு கூட்டி
அகிலத்தார் வருகின்ற காலமெல்லாம்
பெருமைபட ஆறுமுகன் என் அருளோடு
பேருலகில் பெரும் சக்திகள் சூட்சுமமாய் இறங்கி

5. இறங்கியே அற்புதங்கள் நடத்துவரப்பா
இதுகாலம் அரங்கன் சக்திவழி
வரமென ஆறுமுகன் யான் பலசூட்சுமம்
வையகத்தில் அதீதமாக நடத்தி வர

6. வருகின்ற அரங்கன் குடிலுக்கு
வல்லமையும் மேன்மையும் மிகுதி உண்டுஉண்டு
தருகின்ற அரங்கன் அருளமுதிற்கு
தகுதியும் மேல்கதியும் உண்டுஉண்டு

7. உண்டான இந்த அற்புதத்தில்
உயர்வாக அரங்கனோடு ஆறுமுகன் யான்
தயவாக இருந்து நடத்தி வர
தவசி அரங்கன் கொள்கையே

8. கொள்கையே இந்த உலகத்தை ஆளும்
தவசி அரங்கன் தர்மமே இந்த உலகத்தை வெல்லும்
தட்டாது அரங்கன் வழி வர
தரணியில் உலகமாற்றமாக சடுதி இனிதே நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

துறையூர் ஓங்காரக்குடில் என்று அழைக்கப்படுகின்ற ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் முருகப்பெருமானால் உலக நன்மைக்காக அமைக்கப்பட்டதாகும். துறையூர் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரை முருகப்பெருமான் இந்த உலகத்திற்கு அனுப்பிய நோக்கமே இந்த உலகத்திற்கும் உலக மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத்தான். முருகப்பெருமானால் வாசி நடத்திக்கொடுக்கப்பட்டு ஓங்காரக்குடிலாசான் பிரம்மச்சர்யவிரதம் மேற்கொண்டு திருமணத்தை தவிர்த்து பந்த பாசத்தில் அகப்படாமல் உலக மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமே தவம் மேற்கொண்டு வருகிறார்கள்.

பொருள் மீது பற்றோ, உலக ஆசைகளின் மீது பற்றோ இல்லாமல் ஓங்கார குடிலாசான் உலக நன்மைக்கான பணிகளை ஆற்றி வருகிறார்.

ஓங்காரக்குடிலில் உள்ள கட்டிடங்கள் அகத்தியர் சன்மார்க்க சங்க அன்பர்களும் தொண்டர்களும் தங்கி அறப்பணிகளை மேற்கொள்வதற்காகவே கட்டப்பட்டதாகும். சொத்து சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல.

சங்கத்திற்கு உட்பட்ட தாவர சங்கம சொத்துகள் அனைத்தும் நாட்டுமக்களுக்கும் உலகமக்களுக்கும் உருவாக்கப்பட்ட சொத்துகளாகும். இந்த சொத்துக்கள் பொருட்டு எந்த தனி மனிதருக்கும் உரிமையில்லை. இந்த சொத்துக்களை பராமரிக்கவும், மராமத்து பணிகளை செய்யவும், விரிவாக்கம் செய்யவும் மட்டுமே உரிமை உண்டு. மேற்படி சொத்துக்களில் உரிமை கொண்டாடவோ கிரைய விற்கிரையம் செய்யவோ எந்த தனி நபருக்கும் உரிமையில்லை.

மேற்படி சொத்துக்களில் ஓங்கார குடிலாசானின் இரத்த சம்பந்தம் உடையவர்களுக்கோ குடும்ப வழி சம்பந்தம் உடையவர்களுக்கோ எந்தவித உரிமையும் இல்லை. இந்த சொத்துக்கள் முழுமையும் பொது சொத்தாகும். எந்தவித முகாந்திரம் கொண்டும் தனிமனிதனுக்கு உரிமை இல்லை.